# யூன் – 13- செவ்வாய்

**பதுவைப் பதிதர் - புனித அந்தோனியார்**

**"உமது வாக்கில் என் காலடிகளை நிலைப்படுத்தும்"**

**தி.பா 119 : 133**

## முதல் வாசகம் : ஏசாயா 61 : 1 – 3

ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது ஏனெனில், அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார் ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார். ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழங்கவும், நம் கடவுள் அநீதிக்குப் பழிவாங்கும் நாளை அறிவிக்கவும், துயருற்று அழுவோர்க்கு ஆறுதல் அளிக்கவும், சீயோனில் அழுவோர்க்கு ஆவன செய்யவும், சாம்பலுக்குப் பதிலாக அழகுமாலை அணிவிக்கவும், புலம்பலுக்குப் பதிலாக மகிழ்ச்சித் தைலத்தை வழங்கவும், நலிவுற்ற நெஞ்சத்திற்குப் பதிலாகப் "புகழ்" என்னும் ஆடையைக் கொடுக்கவும் என்னை அனுப்பியுள்ளார். "நேர்மையின் தேவ தாருகள்" என்றும் "தாம் மாட்சியுறுமாறு ஆண்டவர் நட்டவை" என்றும் அவர்கள் பெயர் பெறுவர்.

**பதில்பாடல்:** உம் ஊழியன் மீது உமது முக ஒளி வீசச்செய்யும்

## நற்செய்தி : லூக்கா 10 : 1 – 9

அக்காலத்தில் ஆண்டவர் வேறு எழுபத் திரண்டு பேரை நியமித்து, அவர்களைத் தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பினார். அப்போது அவர் அவர்களை நோக்கிக் கூறியது "அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள். புறப்பட்டுப் போங்கள் ஓநாய்களிடையே ஆட்டுக் குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன். பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம் வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம். நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும், "இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!" என முதலில் கூறுங்கள். அமைதியை விரும்புபவர் அங்கு இருந்தால், நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவரிடம் தங்கும் இல்லாவிட்டால் அது உங்களிடமே திரும்பிவிடும். அவர்களிடம் உள்ளதை நீங்கள் உண்டு குடித்து அந்த வீட்டிலேயே தங்கியிருங்கள். ஏனெனில் வேலையாளர் தம் கூலிக்கு உரிமை உடையவரே் வீடுவீடாய்ச் செல்ல வேண்டாம். நீங்கள் செல்லும் ஊரில் உங்களை ஏற்றுக்கொண்டால் உங்களுக்குப் பரிமாறுவதை உண்ணுங்கள். அங்கு உடல் நலம் குன்றியோரைக் குணமாக்கி, இறையாட்சி அவர்களை நெருங்கி வந்துவிட்டது எனச் சொல்லுங்கள்" என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் இறைமகன் இயேசு தமது சீடர்களை நற்செய்திப் பணிக்காக அனுப்பு முன்னர் அவர்கள் சந்திக்க நேரிடும் அனுபவங்களைக் குறிப்பிடுகிறார். இதற்கமைவாக நாம் கிறிஸ்துவுக்காக வாழ்வது மட்டுமல்ல மற்றவர்களையும் அவ்வாழ்விற்குள் ஈர்க்கும் கருப்பொருட்களாக மாற்றமடைய அழைக்கின்றார். இவ்வாறான வாழ்வையே இன்றைய நாளில் நாம் விழாவெடுக்கும் பதுவைப் புனிதரும் வாழ்ந்துள்ளார். நாம் என்ன துறவிகளா? எதற்காக நாம் துறவற வாழ்வு வாழவேண்டும் என்று நாங்கள் நினைக்கலாம். எங்களைப் போன்ற ஒரு மனிதப்பிறவிகளான திருச்சீடர்களால் முடியுமாயின் எம்மால் ஏன் முடியாது? எனவே இவ்வுலக செல்வங்களை குப்பை என ஒதுக்குவோம். "இறையாட்சி நெருங்கிவிட்டது" என விசுவசிப்போம். நாமும் நற்செய்தியை அறிவிக்கும் கருவிகளாக செயல்பட்டு நற்செய்திக்கு சாட்சிகளாக வாழுவோம். கிறிஸ்துவின் சீடர்களாவோம். இதற்காக "மீட்புப் பெற திருமுழுக்குப் பெறுங்கள்" என நாம் யாரையும் கட்டாயப்படுத்த வேண்டியதில்லை. மாறாக இறைமகன் கிறிஸ்து இயேசுவைப்பற்றி கற்கின்ற மாணவர்களாக மாற்றமடைவோம். வேதாகமத்தை வாசிக்க எமக்கு எச்செலவும் ஏற்படப்போவதில்லை. மாறாக, வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ளவாறு எமது வாழ்க்கையை மாற்றி அமைப்பதே எமக்கு ஏற்படும் செலவாகும். வேதம் போதிக்க வீடு வீடாகவோ அல்லது மேடையேறவோ தேவையில்லை. மாறாக, பெற்றோருக்கு அமைந்த பிள்ளையாக, பண்புள்ள சகோதரமாக, அன்புள்ள கணவனாக, மனைவியாக, பாசமுள்ள பெற்றோராக, வலிந்துதவும் உடனுழைப்பாளனாக, தன்னலமற்ற சமூகப் பணியாளனாக வாழ்ந்தாலே போதும். அப்படிப்பட்ட கடுகு விதை போன்ற வாழ்க்கையை, புளிப்புமா வாழ்க்கையை இன்றைய உலகின் போக்கில் நாம் வாழ்வது மிகவும் கடினினம். எனினும் எமது இப்படிப்பட்ட கடினமான வாழ்வின் மூலம் பலவழிகளில் எம்மையறியாமலே எமது அன்றாட வாழ்வால் நற்செய்தி அறிவிப்பாளர்களாக வாழலாம்.